JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//167/2019 |
| | : | Prosecution P.W - 3 |
| NAME | : | சேகனா |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 10.02.2026.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் ஜெயசங்கர்மற்றும் புலன் விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர்கள் கபிபுல்லா மற்றும் சங்கர்கண்ணன் ஆகியோர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். வழக்கு கோப்புக்களின் அடிப்படையில் வழக்கின் ஆவணங்களின் பார்த்து சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 17.09.2016 ம் தேதி 09.00 மணிக்கு மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் நிலையப்பொறுப்பில் இருந்த போது செல்வராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையக் குற்ற எண் 406/2016 இதச பிரிவுகள் 304(A) வின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். **புகார் மனு அசாஆ.2 மற்றும் முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறீயீடு செய்யப்படுகிறது.** அதன் அசல் நகலை கனம் தென்காசி நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை விசாரணைக்காக

விசாரணை அதிகாரியின் பார்வைக்கு வைத்துள்ளார், நகலை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட விசாரணை அதிகாரி 17.09.2016 ம் தேதி 15.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கனகராஜ் மற்றும் துரைசாமி முன்னிலையில் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும், பார்வையிட்டு ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார், **அந்த பார்வை மகஜர் மற்றும் வரைபடம் அ,சா.ஆ.4 மற்றும் அ,சா.ஆ.5 ஆக குறீயீடு செய்யப்படுகிறது,** அதன் பின் அவர்கள் இருவரையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளரர். அதன் பின் சாட்சிகளான செல்வராஜ், சந்திரா, எழிலரசன், மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் ஜெயசங்கரன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன் பின் அன்றே திருநெல்வேலி அரசு மருத்துமனைக்கு 10.30 மணிக்கு சென்று விபத்தில் இறந்துபோன தமிழரசன் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை ஆரம்பித்து 12.30 மணிக்கு பிரேத விசாரணையை முடித்து சடலக்கூறாய்வு வேண்டுதல் விண்ணப்பத்துடன், தலைமை காவலர் இன்னாசிமுத்து என்பவரை பணி நியமனம் செய்து சடலக்கூறாய்வுக்கு பின் நல்லடக்கம் செய்ய உறவினர்களிடம் ஒப்படைக்க செய்ய அறிவுரை செய்தார். **பிரேதவிசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.காவலர் இன்னாசி முத்துக்கு வழங்கிய கடவுச்சீட்டு அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பின் எதிரியை கடந்த 03.02.2017 ம் தேதியன்று பாவூர்சத்திரம் காவல்நிலையத்தில் வைத்து கைது செய்து தக்க இருநபர் ஜாமீனில் விடுவித்துள்ளார். பின்னர் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. சசி அவர்களின் விசாரணைக்கு உட்படுத்தி அவரை விசாரித்து அவரிடம் ஆய்வறிக்கைகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளாரர். **மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கை எண்ணம் இரண்டு அ.சா.ஆ. 8 மற்றும் அசாஆ.9 ஆக குறீயீடு செய்யப்படுகிறது.** பின்னர் இறப்பை உறுதிசெய்த மருத்துவர் அன்பு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் சடலக்கூறாய்வு செய்த மருத்துவர் செல்வமுருகன் என்பவரை விசாரித்து சடலக்கூறாய்வு அறிக்கை பெற்றுவாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **அந்த சடலக்கூறாய்வு அறிக்கை அ.சா.ஆ. 10 ஆக குறீயீடு செய்யப்படுகிறது.** அதன் பின் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவு 304(A) வின் கீழ் சாட்சிகளின் அடிப்படையிலும், ஆவணங்களில் அடிப்படையிலும் குற்ற இறுதியறிக்கை 03.02.2017 ல் தாக்கல் செய்துள்ளார்,

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் சொல்லும் நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் மனுவை பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றும், சம்பவம் இடம் சென்று பார்வை மற்றும் மாரிதி விரைபடம் தயார் செய்யவில்லை என்றும், சாட்சிகைள சரிவர வர விசாரணை செய்யாமல் ஒரு தலைப்படசமாக விசாரணை செய்து வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi